REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630'

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

சாணத்திலிருந்து எரி வாயு!

புதுடில்லி, ஏப். 6—

சாணத்திலிருந்து நல்ல எரிவாயு தயாரித்து அவ்வாயுவை சமையல், வாயு விளக்குகள் ஆகியவற்றிற்கு உபயோகிக்கலாமென்று, இந்திய ஆராய்ச்சிக் கழகம் கண்டுபிடித்துள்ளதாக டெல்லி மேல் சபையில், அமைச்சர் அஜித் பிரசாத் கூறியிருக்கிறார்.

இதனைச் சிக்கனமான முறையில் உற்பத்தி செய்வதற்கான வழி வகைகள் பற்றிய ஆராய்ச்சிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

மலர் 2] சென்னை: பங்குனி 26உ வெள்ளி (8—4—55) ★ ★ வெளியூர்: பங்குனி 27உ சனி (9—4—55) [இதழ் 254

நண்பர் போர்வையில் நாசகால 'ஆரியன்'!

கறைபடுத்தும் நோக்கத்துடன் ஷேக் அப்துல்லாவை விடுவிக்க முயற்சியாம்!

தன்னை விடுவிக்க முயன்ற 'ஆரியன்' பற்றி அப்துல்லா விமர்சனம்

காஷ்மீர் உயர் நீதிமன்றத்தில் ருசிகரத் தகவல்கள்

ஜம்மு, ஏப். 7—

"ஷேக் அப்துல்லா, தான் சிறை வைக்கப்பட்டிருப்பது சட்ட நியாயமா, இல்லையா என்பதை விசாரிக்குமாறு கோரி, உயர் நீதிமன்றத்தில் நீதி பெற விரும்பவில்லை; ஏனெனில், இந்த நீதிமன்றம், ஷேக் அப்துல்லா சிறை வைக்கப்பட்டிருப்பது சட்டபூர்வமானதா அல்லவா என்பதை மட்டுமே நிர்ணயிக்க முடியும்; சிறை வைத்திருக்கும் உத்திரவு சட்டபூர்வமானது என்றாலும்கூட, சிறை வைக்கப்பட்டிருப்பவர் குற்றமற்றவராக இருக்க முடியும்.

"'ஷேக் அப்துல்லாவை சிறை வைத்திருப்பது சட்டபூர்வமானது அல்ல,' என்று கனம் நீதிபதிகள் கூறிவிட்டாலுங்கூட, அந்தத் தீர்ப்பு, அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சரியானவையா, இல்லையா என்பதைத் தெளிவாக்க முடியாது.

"எனவே, ஷேக் அப்துல்லா நீதிமன்றம் ஒன்றிடம் முறையிடுவதைக் காட்டிலும், பொது மக்களின் கருத்து வழங்கும் தீர்ப்பையே பெற விரும்புகிறார்,"

—என்று, ஷேக் அப்துல்லாவின் வழக்கறிஞர், காஷ்மீர் உயர்நீதி மன்றத்தில் கூறியிருக்கிறார்.

'ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்ய வேண்டும்,' என்று ஜெகத்ராம் ஆரியன் என்ற ஒருவர், உயர் நீதி மன்றத்தில் 'ஹேபியஸ் கார்பஸ்' மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

பிரதம நீதிபதி ஜானகிநாத் வாசிர், நீதிபதி ஜே எல். க்லம் ஆகிய இருவரும் மனுவின் மீது விசாரணை நடத்தினர்.

உயர்நீதி மன்றத்திற்கு ஷேக் அப்துல்லா அனுப்பியுள்ள மனு ஒன்றில், 'என் பிரதிநிதியாக நீதி மன்றத்தில் வழக்காட, ஜெகத்ராம் ஆரியனுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது; சட்டப்படி, அவர் ஒரு அன்னியர்; என்னுடைய அனுமதியின்றி தானாகவே முன் வந்து, எனக்காக வழக்காட முற்பட்டிருப்பவர்,' என்று கூறியிருக்கிறார்.

ஷேக் அப்துல்லாவின் வழக்கறிஞரான திலக் ராஜ் பாஷின், இதுபற்றி நீதிமன்றத்தில் குறிப்பிடுகையில், "இந்த ஆரியன் என்பவர், 'ஷேக் அப்துல்லாவின் நண்பர்,' என்ற போர்வையிலிருந்தாலும், ஒரு பரம விரோதியைக் காட்டிலும் எந்த வகையிலும் நல்லவரல்லர்; ஏனெனில், அந்த மனுவில், அவர், ஷேக் அப்துல்லாமீது அவதூறு கிளப்பியிருக்கிறார்; அவர், ஷேக்அப்துல்லாவை விடுவிக்க மனு என்ற தந்திரத்தில், பழி வாங்க முயற்சித்திருக்கிறார்," என்று கூறியிருக்கிறார்.

மனு தாக்கல் செய்த ஜெகத்ராம் ஆரியன், ஷேக் அப்துல்லாவின் நன்மைக்காகவே மனு தாக்கல் செய்ததாயும், அவர் விரும்பாவிட்டால் மனுவைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாகவும் கூறியிருக்கிறார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, 'ஹேப்பியஸ் கார்ப்பஸ்' மனுவை, நீதிமன்றத் தஸ்தாவேஜு கட்டுகளில் கட்டிச் சேர்த்து விடுமாறு உத்தரவிட்டிருக்கிறார்.

பால் உற்பத்தியைப் பெருக்கத் திட்டம்

ரூ. 22 - கோடி செலவு செய்யப்படும்

பால், பாலின் வகையைச் சேர்ந்த பிற பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்திப் பெருக்கத்திற்காக இரண்டாவது அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ 22 கோடி செலவில் திட்டம் ஒன்று சேர்க்கப்படுவது பற்றிய ஆலோசனைகளில் சர்க்கார் ஈடுபட்டிருப்பதாகவும், எனினும் இத்திட்டம் பற்றி முடிவான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும், டெல்லி மக்கள் சபையில் விவசாய அமைச்சர் பஞ்சாப் ராவ் தேஷ்முக் கூறினர்.

கோவா போலீசார் வெறியாட்டம்

அறப்போரில் ஈடுபட்ட தாய்மாரை தடிகொண்டு தாக்கினராம்

போர்த்துகீசிய ஆதிபத்தியம் சரிகிறது!

பெல்காம், ஏப். 6—

'நாடு கடத்துவோம்; அடக்குமுறைக்கு ஆளாக்குவோம்; உயிர்களைப் பலி கொள்ளுவோம்,' என்ற பயமுறுத்தல்களுக்கு கோவா தேசிய காங்கிரஸ் பயந்துவிடாது; கோவா சர்க்காரும், போர்த்துகீசியரும் உடனடியாக அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு, கோவாவை விட்டு வெளியேறிவிடவேண்டும்,"

என்று, கோவா தேசியக் காங்கிரசின் ஒன்பதாவது மாநாடு, காலனிக்குள்ளிருக்கும் மாபுசா என்ற இடத்தில் கூடியபோது கோரியுள்ளது.

இரண்டு தீர்மானங்களும் அந்த மாநாட்டில் நிறைவேறின.

மாநாடு முடிந்ததும், கோவா இராணுவத்தினர், தலைவர்களையும் தொண்டர்களையும் சூழ்ந்துகொண்டு, கூடியிருந்த மக்களை பலமாகத் தாக்கியிருக்கின்றனர்.

★

கோவா தேசியக்காங்கிரசின் ஒன்பதாவது மாநாட்டுத் தலைவியான திருமதி ஜோஷி, மற்றும் 50 தொண்டர்கள், போர்த்துகீசிய ஆதிக்கத்தை எதிர்த்து மாபுசா நகரின் நடுவே அறப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்டனர் என்று தெரிய வருகிறது.

75 வயது கிழவி ஒருவர் உட்பட மூன்று பெண்களும், ஏராளமான ஆண்களும் அறப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

அறப்போரில் ஈடுபட்டு விடுதலை ஒலி முழக்கம் செய்துகொண்டிருந்த திருமதி ஜோஷி உட்பட பலரும் மிருகத்தனமாக கோவா போலீசாரால்தாக்கப்பட்டனராம்; என்றாலும், விடுதலை விரும்பிகள் தடியடியைத் தாங்கிக்கொண்டே அறப்போர் புரிந்திருக்கின்றனர்.

சுட்டுக் கொல்லப்பட்டார்

சவந்தவாடி எல்லையருகே உள்ள கிராமமொன்றில் கோவா தேசியவாதி ஒருவர், இந்திய மூவர்ணக் கொடியை ஏற்ற முயற்சிக்கையில், போலீசாரால் சுட்டு வீழ்த்தப்பட்டதாகத்தெரிகிறது.

கோவா அதிகாரியைக் கொல்ல முயற்சி

அவசர இராணுவ இலாகாத் தலைவரான போர்த்துகீசிய அதிகாரி ஒருவரைக் கொல்வதற்கு செய்யப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது என்று கூறப்படுகிறது.

கோவாவிலிருந்து 15 மைல் தொலைவில் உள்ள பஞ்சிம் நகருக்குச் செல்லும் வழியில் பொரிம் என்னுமிடத்தில் காரில் சென்று கொண்டிருந்த அந்த அதிகாரி மீது இரண்டு குண்டுகள் வீசப்பட்டனவாம்.

ஐந்து பேர் கொண்ட ஒரு கூட்டம் இந்தத் தாக்குதலை நடத்தியது என்றும், அவர்கள் யாரென்பது இன்னும் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

மூடத்தனத்திற்குப் பலியான தேவம்மாவின் சோகக்கதை!

'புண்ய பாக்கியம்' என்ற புராண புத்தகம் புகுத்திய மடமை!

குழந்தை பெறவேண்டி தன்னையே பலி கொடுத்தாளாம்!

பூனா, ஏப். 8—

தேவம்மா என்ற 30 வயதுடைய பெண்ணின் தலையற்ற முண்டம் இங்கிருந்து 20 மைல் தொலைவில் உள்ள காட்டில், ஒரு சிவலிங்கத்தின் முன்பு காணப்பட்டது பற்றி ஏற்கனவே வெளிவந்த செய்திகளைத் தொடர்ந்து மேலும் பல தகவல்கள் கிடைத்துள்ளன.

தேவம்மாவின் உடலருகே கிடந்த 'புண்ய பாக்கியம்' என்ற தெலுங்கு புராணப் புத்தகம் ஒன்றும், ஏழு மாங்கனிகள், சில 'பூஜை' சாமான்கள் முதலியனவும், அந்த வேதனையான சோகச் சம்பவத்திற்கான காரணத்தைக் கூறுகின்றன.

தேவம்மா தன்னைத் தானே தியாகம் செய்து கொண்டது, தன் கணவனுக்கு ஏழு அதிசயக் குழந்தைகள் பிறக்கும் என்ற நம்பிக்கையால்தான் என்று கூறப்படுகிறது.

குழந்தைப் பேறு இல்லாத பெண்கள், தங்கள் கணவர்களுக்கு குழந்தைகளைத் தருவது பற்றி விரிவான கதை ஒன்று கொண்டதாம், அந்தப் 'புண்ய பாக்கியம்' என்ற புராணப் புத்தகம்!

அந்தப் புத்தகத்தில், குழந்தைகளே இல்லாத ஒரு ராணி, தன் கணவருக்கு ஏழு குழந்தைகளைத் தருவதற்காகச் செய்த 'தியாகம்' பற்றியகதை ஒன்று கூறப்பட்டுள்ளதாம். அந்தக் கதையைக் கொண்டு தான் தேவம்மா இத்தகைய 'தியாக'த்தைச் செய்திருக்க வேண்டும் என்று போலீசார் கருதுகின்றனராம்.

அந்தக் கதையில், வரும் ராணி, சிவபெருமானிடம் தனக்கு குழந்தைகள் வேண்டுமென பிரார்த்தனை செய்துவந்தாராம்; அவள் தனது உயிரை திரணமாக மதித்து 'தியாகம்' செய்தால், ஏழு குழந்தைகள் தருவதாக சிவபெருமான் கூறினாராம்; அந்த ராணி உயிரைத்தர சம்மதம் தெரிவித்ததும், சிவபெருமான், அவளிடம் சிவ

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★★

முதல் முயற்சி!

மாநில மாநாட்டுக்காக தி. மு. கழகம் 23 ஆயிரம் ரூபாய் பணம் திரட்டுவது என்ற பேரூர் தீர்மானத்தின்படி, சென்னையில், ஏப்ரல் 24-ந் தேதி மாலை,

புரட்சி நடிகர்

M.G. இராமச்சந்திரன்

அவர்கள்

'பகைவனின் காதலி'

எனும் நாடகத்தை நடத்தித் தர இசைந்துள்ளார்கள் என்பதைப் பெருமிதத்துடன் கூறிக் கொள்கிறேம்- மாநில மாநாட்டுக்கு நிதி திரட்டும் முதல் முயற்சி இது; முதல் முயற்சி, நமக்கெல்லாம் பெருமை தரத்தக்கதாக, வெற்றிகரமாக அமைதல் வேண்டும்.

முதல் முயற்சியின் வெற்றியின் துணைகொண்டுதான், தொடர்ந்து பல காரியங்கள் நடந்தேற வேண்டியிருக்கிறது.

சென்னைத் தோழர்களிடம், முதல் முயற்சி ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

பெருமைப்படத்தக்கவிதமான வெற்றியைத் தேடித்தரும் பெரும் பொறுப்பு சென்னைத் தோழர்களுக்கு!

சென்னைத் தோழர்கள், வெற்றியைத் தேடித்தருவார்கள் என்ற நம்பிக்கை நாடெங்கும் இருக்கிறது!

தோழர்களே! இன்றிலிருந்தே பணியாற்ற வாருங்கள்!!

முதல் முயற்சி—ஏப்ரல் 24-ல்!

விவரம், அடுத்த அறிக்கையில்!

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்..அண்ணுதுரை

சென்னை 8—4—'55 வெள்ளி

போலீஸ்! போலீஸ்!!

போலீஸ் ராஜ்யம்! போலீஸ் அக்கிரமம்! தடியடி தர்பார்! —என்றெல்லாம், கனலும் புனலும் ததும்பும் கண்களுடன் நின்று முழக்கமிட்டு, வெள்ளையர் ஆட்சியைக் கண்டித்த கட்சியினர் காங்கிரஸ்காரர்கள்.

குண்டர்களாட்சி — உடை 'காக்கி'யாக இருந்தால் என்ன, கையிலிருப்பது குண்டாந்தடி, கருத்திலேயோ காட்டுமிராண்டித்தனம் நெளிகிறது என்று இடித்துரைத்தனர், இந்நாட்டு விடுதலைப் போர் நடத்தும் புனிதர்களாகக் காட்சி தந்தகாலை.

செந்தலைப் பூச்சிகள்! என்று இழித்தும் பழித்தும் பேசினர்.

எங்கும் போலீஸ்! எதற்கெடுத்தாலும் போலீஸ்! எந்தையர் நாட்டை மீட்க வீரர் கூடிடும் இடத்திலே போலீஸ்! தாயின் மணிக்கொடியைப் பறக்கவிட்டு அதன் கீழே நின்று 'வந்தேமாதரம்' பாடினுல் போலீஸ்! தலைவர்கள் நடமாடும் இடமெல்லாம்போலீஸ்! மகாத்மாவின் தொண்டர்களைத் துரத்தி அடிக்கப் போலீஸ்! மாணவர்களின் அணிவகுப்பை சிதறடிக்க போலீஸ்! மாதர்கள் கூடி நின்று அன்னை பாரத தேவியின் புகழ்ப் பண்பாடிடும் போதும் போலீஸ்! உழைத்து உருக்குலைந்து போயுள்ள உத்தமராம் தொழிலாளர்கள் கூடி நின்ருல் போலீஸ்! செச்சே! இதென்ன ஆட்சி! எங்கும் போலீஸ் மயம்! நியாயத்தை ஒடுக்கப் போலீஸ்! நீதியைச் சாகடிக்கப் போலீஸ்! பேயாட்சி அன்ருே இது!—என்று வீர முழக்கமிட்டவர்கள், கதருடுத்திக் காந்தியைப் போற்றி வாழ்ந்த காங்கிரசார்.

இன்று, அவர்கள் ஆளவந்தார்களாகிவிட்டனர்; 'செந்தலைப் பூச்சிகள்' என்று எந்தப் போலீஸ் படையினரைக் கேவலமாகப் பேசினரோ, அந்தப் படையின் பாதுகாப்பு கொண்டே எந்தக் கிளர்ச்சியானுலும் ஒடுக்க முனைகிருர்கள்; இது குறித்து அவர்கள் வெட்கப்படவுமில்லை; மாருக, 'இதுதான் முறை' என்று வாதாடவே செய்கிருர்கள்.

'அய்யோ போலீஸ்! அம்மா போலீஸ்!' என்று அலறிய நாள் போய்விட்டது.

இப்போது, "அப்படியா! இதோ போலீஸ்," என்று கூறி, மக்களை மிரட்டும் காலம் நடக்கிறது.

இந்த மனப்போக்கை பளிச்

முறையீடு போலும்,' என்று எண்ணிவிடாதீர்கள்—அன்பர் வெளிப்படையாகவே, காரணம் காட்டுகிருர்.

'பஞ்சாபில் **தாராசிங்** எனும் தலைவரின் செல்வாக்கு வளர்ந்துவிட்டது—அதை ஒடுக்க போலீஸ் மும்முரமாகக் கிளம்ப வேண்டும்,' என்கிருர்.

'**பஞ்சாப் மாகாணம்** அமைந்தாக வேண்டும்,' என்ற கிளர்ச்சி வலுப்பெற்றுவிட்டது.

தேசியம் பேசியும், தீ அணையவில்லை!

பல்தேவ சிங்குகளுக்குப் பதவி கொடுத்தும் தீ அணைய மறுக்கிறது!

தாராசிங் மீது வசை மொழியை வீசி வீசி ஓய்ந்துவிட்டனர்; அந்த முதியவரின் முழக்கம் இல்லமெங்கும், இதயமெங்கும் ஆர்வத்தை—உறுதியைப் பதித்துவிட்டது.

அவருக்கு 'எதிர்ப்பு' மூட்டினர்; பயன் இல்லை!

தாராசிங், இன்னும் பாஞ்சால நாட்டுத் தனிப்பெருந் தலைவராகத் திகழ்கிருர்.

"மொழிவழி அரசு அமைத்தல் குறித்து ஆய்வுக்குழு அமைக்கிரேம்."

"எல்லைத் தகராறுகளைத் தீர்த்துவைக்கத் தனிக்குழு அமைக்கிரேம்."

இவ்விதமெல்லாம், தீ அணைப்புப் படையினர் வேலை செய்தனர்; தீயோ கொழுந்துவிட்டு எரிகிறது.

'எப்படியும் பஞ்சாபி மொழி பேசும் பகுதியைத் தனி அமைப்பு ஆக்கியே தீருவேன்,' என்று முதியவர் முழக்கமிடுகிருர்.

மிரட்டலுக்கு அஞ்ச மறுக்கிருர்! மயக்க மொழிக்குச் செவி சாய்க்க மறுக்கிருர்! அவருடைய 'விடுதலைக் கிளர்ச்சி' வலுப் பெற்றுவிட்டது.

சூளுரைத்துவிட்டார்—'எப்படியும் பஞ்சாபி மொழி அரசு பெற்றுத் தீருவேன்' என்று.

இந்தத் தாராசிங் எனும் தலைவரை ஒடுக்கத்தான், 'போலீஸ் வேண்டும்! மேலும் மேலும் வேண்டும்! எந்த நேரத்தில், என்ன நேரிடுமோ தெரியாது: எனவே, இப்போதே முன்னெச்சரிக்கையாக, போலீஸ் படையை அதிகப்படுத்த வேண்டும்,' என்று ராமதாஸ் அலறித் துடித்தபடி அரற்றுகிருர்!

காங்கிரஸ்காரர்தான்!

பஞ்சாப் கிளர்ச்சி — பலவற்றிலே ஒன்று.

வங்காளத்துக்கும் — அசாமுக்கும் இடையே 'இடம்பிடி' சண்டை இருக்கிறது! அடிக்கடி வெடிக்கவும் செய்கிறது!

பீகாரிக்கும்—வங்காளிக்கும் பேதம் இருக்கிறது; எல்லையில் பீதியூட்டும் சம்பவங்கள் கிளம்புகின்றன!

'பம்பாய் நகரம் உனக்கா, எனக்கா,' என்பதிலே, உருட்டு விழி காட்டி நிற்கின்றனர், மராட்டியரும் — குஜராத்திகளும்!

பர்லாகிமிடி பகுதியில், ஆந்திரருக்கும்—ஒரியருக்கும் சச்சரவு!

சித்தூர் பகுதியில், தமிழர்—தெலுங்கர் பூசல்!

நாஞ்சில் பகுதியில், தமிழர்—மலையாளி மோதல்!

கன்னடியருக்கும்— ஆந்திரருக்கும் கசப்பு!

இவைபோல், பல!

ஆதிவாசிகள் கிளர்ச்சி—நாக நாட்டினர் கிளர்ச்சி—என்பன, 'மொழிவழி அரசு தேவை,' என்பதற்கான கிளர்ச்சிகளைவிட, மும்முரமானவை!

எல்லாக் கிளர்ச்சிகளையும் மிஞ்சுவதாக உள்ளது, திராவிடரின் பெருங் கிளர்ச்சி!

இவைகள் ஏதோ, 'போலீஸ் படைகொண்டு அழித்துவிடக் கூடியவை,' என்று காங்கிரஸ்டயர்களும் **வெலிங்டன்களும்** மனப்பால் குடிக்கிருர்கள்.

அடிப்படை இலட்சியங்களின் மீது கட்டப்படும் எந்தக் கிளர்ச்சியையும், அடக்குமுறை கொண்டு அழித்தொழிக்க முடியாது.

ஆளவந்தார்களான பிறகு இந்த அரிச்சுவடியை மறந்துவிட்ட ராமதாசர்கள், 'போலீஸ், போலீஸ்!' என்று கூவிக் கூவி அழைக்கிருர்கள்!

சிரிப்பும் வருகிறது, பரிதாபமாகவும் இருக்கிறது—இவர் போன்ருரின் போக்கைக் காணும்போது!

பண்டைக்கால கலைப் பொக்கிஷங்கள்

லண்டன், எப். 6—

இந்தியாவின் பண்டைக்கால கலைப் பொக்கிஷங்களையும், சரித்திர சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுக்களையும் திருப்பித்தரும் பிரச்சினையில், இந்தியா-இங்கிலாந்து ஆகியவற்றிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இது சம்பந்தமாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் மூலம் அவற்றைத் திருப்பித் தர பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புதல் அளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

திருவாங்கூருடன் கொச்சி இணைந்ததின் விளைவு

துயரங்கள் அதிகரித்துள்ளனவாம்

மக்கள் சபையில் முறையீடு

"கடந்த 1949-ம் ஆண்டில், திருவாங்கூருடன் கொச்சி இணைக்கப்பட்டதிலிருந்து கொச்சி மக்களின் நலன்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன; மாநிலத்தின் தலைநகர் எங்கோ ஒரு மூலையில் இருப்பதால், கொச்சி மக்கள், தங்களின் குறைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக்கொண்டு வர மிகவும் கஷ்டப்படுகிருர்கள்;

"எந்த ஒரு விதி உருவாக்கப்பட்டாலும், அவை, திருவாங்கூர் மக்களுக்குச் சாதகமானவையாகவே இருக்கின்றன; மத்திய பாரத்திலிருப்பதைப் போல, தலைநகரம், வருடத்தில் ஆறு மாதங்களுக்கு கொச்சியிலிருந்தால்தான் கொச்சி மக்களின் துயரங்களை திருவாங்கூர் மக்கள் உணர்ந்துகொள்ள முடியும்"

இவ்வாறு, திரு—கொச்சி காங்கிரஸ் கட்சி மக்கள் சபை உறுப்பினர், உள்நாட்டிலாகா மானியக் கோரிக்கை விவாதத்தின்போது எடுத்துக் கூறியிருக்கிருர்.

பாலாறுதண்ணீர் தகராறு

மைசூரின் பதில்

பாலாறு தண்ணீரை உபயோகிப்பது சம்மந்தமாக 1892-ம் ஆண்டில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை மைசூர் சர்க்கார் மீறிவிட்டதாக சென்னை சர்க்கார் சுமத்திய குற்றச்சாட்டை மைசூர் மராமத்து அமைச்சர் மறுத்திருக்கிருர்.

இதுபற்றி விசாரிக்க ஒரு குழு நியமிக்க வேண்டுமென சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டதைக் குறித்துப் பேசுகையில் அவர், 'ஒப்பந்தத்தை மைசூர் சர்க்கார் மீறியதாக சென்னை சர்க்கார் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைக்கூட வெளியிடவில்லையே,' என்ருர்.

இதுபற்றி தாம் சென்னை சர்க்காருக்கு ஒரு கடிதம் எழுதப்போவதாக அவர் மைசூர் சட்டசபையில் கூறியிருக்கிருர்.

'மைசூர் சர்க்காருடன் விவாதிக்கு முன்னர் அறிக்கைகள் எதுவும் வெளியிட வேண்டாம்' என்று சென்னை சர்க்காரை அமைச்சர் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

இந்தியாவில் 27 சதுர மைல் பிரதேசத்துக்கு ஒன்று வீதமும், 7,773 நபர்களுக்கு ஒன்று வீதமும் அஞ்சல் நிலையம் உள்ளன.

விவசாயப் பொருள் விலை வீழ்ச்சி

மக்கள் சபையின் கருத்து

புதுடில்லி, எப். 6—

உணவுப் பண்டங்களின் விலைவாசிகள் சரிந்து வருவதைக் குறிப்பிட்டு, மக்கள் சபையில் பல உறுப்பினர்கள், சர்க்கார் தனது தற்போதைய கையிருப்பை வெளியிடுவதானுல் நிலைமை மேலும் மோசமடைந்து விடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், இது குறித்து சர்க்கார் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்தியிருக்கின்றனர்.

கேள்விகளுக்குப் பதிலளித்துப் பேசிய உணவு, விவசாய உதவி மந்திரி கிருஷ்ணப்பா, சர்க்கார், மணங்கொன்றிற்குக் கட்டுப்படியான விலை ரூ. 11 என்று கருதுவதாகவும், ரூ. 11-க்குக் குறைவாக அரிசி விலை இறங்காததால் அரிசியை சர்க்கார் வாங்கும் பிரச்சினையே எழவில்லை என்றும் தெரிவித்திருக்கிருர்.

சர்க்கார், தற்போதைய கையிருப்பு சேமிப்புகளை வெளியிடுவதானுல் சென்னையில் ஏற்படவிருக்கும் விளைவுகள் குறித்துத் தோழர் பி. எஸ். இராசகோபால் கேட்டபோது, விவசாய மந்திரி பஞ்சாப் ராவ் தேஷ்முக், சென்னையில் நிலவும் விலையைப் பாதிக்கும் வகையில் சர்க்கார் சேமிப்புகளை வெளியிடமாட்டார்களென்றும், நிலைமையைக் கவனித்து, பாதிக்கத் தகுந்த முறையில் உள்ளவைகளைத் தவிர்த்து விடுவர் என்றும் கூறியிருக்கிருர்.

ரூர்கேலா உருக்குத் தொழிற்சாலை

புதுடில்லி, எப். 5—

ஒரிசாவில் அமைந்துள்ள ரூர்கேலா உருக்குத் தொழிற்சாலை நிர்மாணிப்பதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றனவாம்.

தொழிற்சாலை அமைக்கும் பொறுப்பேற்றுள்ள ஜெர்மானிய கம்பெனியான 'க்ரப்-டெமாக' கம்பெனியார், திட்ட வேலைகளைத் துவங்கவிருக்கின்றனர். தொழில் நுணுக்கப் பயிற்சி ஆரம்பமாகிவிட்டது என்றும் அறிவிக்கப்படுகிறது.

முதலில் இத்தொழிற்சாலையின் உற்பத்தி அளவு 50 ஆயிரம் டன் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தபோதிலும், திட்டத்தில் பெரிய மாற்றங்கள் இருக்காதெனவும் கம்பெனியார் அறிவித்திருக்கின்றனர்.

பயிற்சி பெறுவோர் தங்கவும், வேலை செய்வதற்குமான ஏற்பாடுகள் துவங்கப்பட்டுவிட்டதாகவும் தெரிகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மே தின விழா

இந்த ஆண்டு மே தின விழா விழா மிகச் சிறந்த முறையில், சென்னையில் நடத்தித்தரும் பொறுப்பை, 'ஜாம் பஜார்' 42-வது வட்...

ஈடுபடுகிறது என்பதை எடுத்துக் காட்டும் முறையில், விழா அமைகிறது.

தோழர் அண்ணுதுரை, பொதுக்

"தொழில் பெருக்கமே நிலத்தின் நெருக்கடியை நீக்கும்"

"உழவர் உயர வேறு பணிக்கு ஏற்பாடு வேண்டும்"

"வெளிநாட்டில் பயின்ற மாணவர்கள் உடலுழைப்பை ஒதுக்கக்கூடாது"

இராமராஜ்யத்தின் உணவுப் பெருக்கம் குறித்து இந்தியப் பிரதமரின் விளக்கம்

புதுடில்லி, ஏப். 4—

"அமெரிக்காவில், நான் ஒரு விவசாயக் கல்லூரிக்குச் சென்றேன்; அங்கு கல்வி கற்கும் இந்திய மாணவர்கள், துவக்கத்தில், பால் கறக்கக்கூட தயக்கங் காட்டுகின்றனர் என, அக்கல்லூரி பொறுப்பாளர் என்னிடம் குறிப்பிட்டார்.

"இராமராஜ்யத்தில் ஒருவரும் பட்டினி கிடந்தது இல்லை; மக்கள் அனைவரும் உண்டு களித்தனர் எனக் கூறப்படுகிறது உபயோகப்படுத்தப்படும் அளவைக் காட்டிலும் மிகுதியான உணவுப் பெருக்கு இருந்தது என்ற பொருளில், அக்காலத்தில் இந்தியா செழிப்பாக இருந்தது என்பதில் ஐயமில்லை. இப்பொழுது இருப்பதில் நூற்றுக்கு ஒன்று விதம்கூட, அப்பொழுது மக்கள் தொகை இருக்கவில்லை எனச் சிலர் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். பயிர் செய்யும் நிலம் அப்பொழுது பெரிய அளவில் இருந்தது; உற்பத்தியும் மிகுதியாக இருந்தது. ஆண்டு நூறு நூருகக் கூடக்கூட, கிடைக்கும் உணவு நிலையை மீறி மக்கள் தொகை பெருகிவிட்டது. இப்பேருண்மையை மறந்துவிடக் கூடாது.

"நிலத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைக் குறைக்க வேண்டும். நிலத்தையே நம்பி வாழும் மக்கள் தொகையைக் குறைக்க, அவர்களுக்கு வேறு வேலையும், தொழிலும் ஏற்படுத்தப் படவேண்டும்."

—இவ்வுண்மையை, விவசாயிகளின் முதல் தேசிய மாநாட்டைத் துவக்கி வைத்த இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் அறிவித்தார்.

அவர் மேலும் பேசும்பொழுது கூறியதாவது:—

"நவீன விவசாய உற்பத்தி முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் விஞ்ஞான அறிவைப் பெற்று வெளிநாடுகளிலிருந்து திரும்பிவரும் இந்திய மாணவர்கள், இந்த நாட்டில் நிலவும் நிலைமைக்கேற்ப அவ்வறிவைப் பயன்படுத்த முற்பட வேண்டும்.

"பயிற்சி பெற்றுத் திரும்பி வருகிறவர்களில் சிலர், இங்குள்ள தட்பவெட்ப நிலையையும் மக்களின் மனப் போக்கையும் சீர்தூக்கிப் பார்க்காது நடந்துகொள்ளும் போக்கை நோக்கும்பொழுது, அத்தகு பயிற்சி பெறுவதற்காகப் பிற நாடுகளுக்கு மாணவர்களை அனுப்புவதில்கூட திகைக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

"வெளிநாடுகளுக்குச் சென்று பயிற்சி பெற்றுவந்தவர்கள் சென்ற காலத்தில் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். எந்தவித உடலுழைப்பிலும் அவர்கள் ஈடுபட்டு அறியாதவர்களாகவோ, அல்லது உடலுழைப்பு இழிவானது எனக் கருதுபவர்களாகவோ அவர்கள் இருந்தவர்களாவர்.

"உடலுழைப்பைக் கண்டு வெறுக்கும் போக்கு, கற்றவர்களுக்கும், விவசாயிகளுக்கும் இடையில் ஒரு தடுப்புச் சுவரை எழுப்பிவிட்டிருக்கிறது; இச்சுவர் தகர்க்கப்பட வேண்டும்.

"ஒரு ஏகரின் உற்பத்தியில் மற்ற நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் பெரும் ஏற்றத் தாழ்வு இருந்து வருகிறது. விவசாயத் துறையில் இந்தியா ஒரு முன்னேற்ற நாடாக விளங்க வேண்டுமானால், 'இப்பொழுது உற்பத்தியாவதை இரு மடங்காக, மும்மடங்காகப் பெருக்க வேண்டும்'

"எதிர் நோக்கி இருக்கும் பிரச்சினைகள் பலவற்றுள், பெரிய நிலப்பரப்பின் உரிமையாளர்களாகச் சிலரே இருக்கக்கூடாது என்பதும் ஒன்றாகும். இந்த வேற்றுமையை விலக்கும் நேரத்தில், உற்பத்தியும் கீழ்நோக்கிவிடாமல் கவனித்துக்கொள்ள வேண்டும்."

இந்தியாவில் கனரகத் தொழில்

விரைவில் துவங்கப்படுமென மந்திரி நந்தா அறிவிப்பு

"இந்தியாவில் வெகு சீக்கிரத்திலேயே கனரக, மின்சார இயந்திர உற்பத்தி துவங்கவிருக்கிறது,"

என்று திட்ட மந்திரி நந்தா மக்கள் சபையில் அறிவித்திருக்கிறார்.

"வேறு பல கனரகத் தொழில் துவங்குவது பற்றியும் சர்க்கார் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர்," என்றும் அவர் கூறியிருக்கிறார்

மத்திய உற்பத்தி மந்திரியின் மழுப்பல்

"இந்தியாவில் மேலும் ஒரு புது உருக்குத் தொழிற்சாலை நிறுவுவது குறித்து பிரிட்டிஷ் நிபுணர் குழுவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தும் பொறுப்பை உற்பத்தி இலாகாவை விடுத்து தொழில் வர்த்தக இலாகாவிடம் ஒப்படைத்ததற்குக் காரணம் நிர்வாக வசதிதான்,"

என்று, உற்பத்தி இலாகா மந்திரி கே. சி. ரெட்டி மக்கள் சபையில் மழுப்பியிருக்கிறார்.

"இந்தத் தொழிற்சாலை நிறுவும் பிரச்சினையின் அடிப்படையில், தொழில் வர்த்தக இலாகா மந்திரியான டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்கும், பிரதமர் நேருவுக்கும் கருத்துவேறுபாடு இருந்ததும், அதன் விளைவாக, அவர் ராஜினாமா செய்துவிடப் போவதாகப் பூச்சாண்டி காட்டியதும், பின்னர் தன்னிஷ்டம் போல், அந்தப் பிரச்சினையை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதும், பதவியில் போய் அவர் மீண்டும் ஒட்டிக் கொண்டதும் நாட்டவர் நன்கறிந்திருக்கும்போது, உற்பத்தி மந்திரி ரெட்டியின் மழுப்பலைக் கேட்டு நாங்கள் ஏமாந்து விடமாட்டோம்,"

என்று மக்கள் சபை உறுப்பினர்கள் கருதுகின்றனராம்

பல மொழி எழுதும் புதுக் கருவி

கொழும்பு, ஏப். 5—

சட்ட சபையில் நடைபெறும் விவாதங்களையெல்லாம் ஒரே நேரத்தில் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கக்கூடிய புதுக் கருவி ஒன்று இலங்கை பிரதிநிதிகள் சபையில், வெகு விரைவிலேயே பொருத்தப்படும் என்று செய்தி ஒன்று அறிவிக்கிறது.

சென்னை மாநிலத்தில் 81 - பஞ்சாலைகள்

1 - லட்சம் தொழிலாளர்கள் அலுவலில் ஈடுபட்டுள்ளனர்

சென்னை மாநிலத்திலுள்ள பஞ்சாலைகள், சென்ற ஆண்டில் 5,76,000 பேல் நூலும், 87,000 - பேல் துணியும் உற்பத்தி செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சென்னை மாநிலத்தில் உள்ள 81 ஆலைகளில் 20,000-த்திற்கும் அதிகமான கதிர்களும், 8,400 - தறிகளும் இருக்கின்றன; இவை மாதத்தில் 61,000 பேல் பருத்தியை உபயோகிக்கின்றன

இவைகளில் மொத்தமாக சுமார் 1 லட்சம் பேர் வேலை செய்கிறார்கள் என்றும் கணக்கிடப்படுகிறது

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாகங்களைக் கொண்டு 'டிராக்டர்'களைத் தயாரிக்கும் வேலையில் தற்போது இரண்டு கம்பெனிகள் ஈடுபட்டுள்ளன; மற்றும், டிராக்டர்கள் கொண்டு இழுக்கப்படும் இயந்திர சாதனங்கள் நீங்கலாக, இதர விவசாய இயந்திர சாதனங்களின் உற்பத்தியில் சுமார் 60 தொழிற்சாலைகள் ஈடுபட்டுள்ளன.

தோழியர் நீலாவதி — தோழர் கோவிந்த் திருமணம்

சென்னை, ஏப். 7—

இன்று மாலை 6 மணிக்கு சைதாப்பேட்டை ஜோன்ஸ் ரோடு அன்னதான சமாஜ கட்டிடத்தில், தோழர் எம். ஆர். கோவிந்த்—தோழியர் நீலாவதி திருமணம் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விதவைத் தோழியரை மணந்துகொண்ட மணமகனைப் பாராட்டி, தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர் சைதை அண்ணாமலை சொற்பொழிவாற்றினர்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் மணமக்களை வாழ்த்தியும், காதல், கலப்பு, விதவைத் திருமணங்கள் நாட்டிலே நடைபெற வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியும் அரியதோர் சொற்பொழிவாற்றினார்.

மணமக்களுக்கு ஏராளமான பாராட்டிதழ்களும், பரிசுகளும் வழங்கப்பெற்றன. ஆலந்தூர் தி.மு. கிளைக் கழகம் உள்பட பல சங்கங்கள் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

மணமகன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 10 தரப்பட்டது—வரப் பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

******** ***** ************************

ஐந்தாண்டுத் திட்ட அக்கிரமம்

கண்டனத் தாள்

ஐந்தாண்டுத் திட்டத்தின் பேரால் இந்திய சர்க்கார் நடத்தியுள்ள அக்கிரமத்தைக் கண்டித்துப் பொதுமக்களுக்கு உண்மை நிலையை எடுத்துக் காட்ட, கண்டனத் தாள் அச்சாகி இருக்கிறது.

இரு வண்ணங்களில், படத்துடன், லித்தோ முறையில் அச்சாகியுள்ள இந்தத் தாள்களை எல்லா கிளைக் கழகங்களுக்கும் அனுப்ப ஏற்பாடாகி இருக்கிறது.

தோழர்கள், இந்தத் தாள்களை, சேதமாகாத முறையில் பயன்படுத்த வேண்டுகிறோம்.

கண்டபடி சுவர்களில் ஒட்டி விடுவதைக் காட்டிலும், கழகப் பணி மனைகள், கழகத் தோழர்களின் இல்லங்கள், கடைகள் ஆகிய இடங்களில் தாளை அட்டையில் ஒட்டித் தொங்கவிட்டு வைப்பது பயனளிக்கும்.

அதிகமான நாட்களுக்கு, இந்தத் தாள்களைப் பொதுமக்கள் பார்வையில் படும்படியான முறையில் பயன்படுத்த வேண்டுகிறோம்.

சந்தைகள் நடக்கும் இடங்களில் தாள்களை அட்டைகளில் ஒட்டி எடுத்துக் கொண்டு, தொண்டர்கள் சென்று வரலாம்; திருவிழாக்களிலே வேண்டாம்.

தி. மு. கழகம்—
தலைமை நிலையம்

******* ********************************

சென்னை மேல் சபையில்...

★

சாகுபடி நிலங்களின் எண்ணிக்கை

இவ்வாண்டில் (1954—55) உணவுப் பயிர்களின் கீழ் 1,47,61,800 ஏகர் நிலமும், வர்த்தகப் பயிர்களின் கீழ் 35,41,400 ஏகர் நிலமும் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டதாக ரெவினியூ அமைச்சர் மாணிக்கவேலர் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டுக்கு மொத்தமாக 1,11,600 டன் இரசாயன எரு தேவைப்படுகிறதென்றும் கூறியிருக்கிறார்.

ஓயாத பிரச்சினை!

ஆவடியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டிற்கென ஆவடிக்கு புழலேரியிலிருந்து குழாய்கள் போட நகரசபைக்கோ அல்லது வேறு எந்த நிறுவனத்திற்கோ விசேட மானியம் எதுவும் வழங்கப்படவில்லை என்றும், ஆவடி தண்ணீர் விநியோகத்திற்கான காரியங்களையெல்லாம் அதனை நடத்தியவர்களே கவனித்துக் கொண்டனரென்றும் அமைச்சர் ஷெட்டி தெரிவித்தார்.

'தன்மானந்'தானா?

சென்னை மாநில சர்க்கார் அலுவலகங்களில் 199 கூர்க்காக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனரென்றும், இவர்கள் காவலுக்காக இருப்பதால் அவர்களுக்குத் தமிழ்மொழி தெரியாததும் ஒரு அனுகூலம் தான் என்றும் அமைச்சர் பக்தவத்சலம் கூறினார்.

தமிழரும்—ஆந்திரரும்!

ஆந்திர மாநிலத்தில் தகுந்த பதவிகள் வருகின்றபோது சென்னையில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள ஆந்திர அதிகாரிகள் அதில் நியமிக்கப்படுகின்றனரென்றும், இதுபோலவே, மாற்றுதலாகிப்போன ஆந்திரரல்லாத அதிகாரிகள் இங்கு திரும்பி வருகின்றனரென்றும் அமைச்சர் பக்தவத்சலம் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் கூறினார்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த அதிகாரி ஒருவருக்குத் தெலுங்கு மொழி தெரிந்திருந்தாலும், அல்லது தெலுங்கே தன் தாய்மொழி என்று கூறினாலும் அவரை ஒரு ஆந்திரர்தான் என்று ஆந்திர மக்கள் ஏற்றுக்கொள்வதில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பண வசதியே!

கிராம அதிகாரிகளின் நிலை உயர்வடைவதற்குத் தேவையானது பண வசதியேதவிர, வெறும் குழு நியமித்துவிடுவதால் மட்டும் அப்பிரச்சினையில் பரிகாரம் கண்டுவிட முடியாது என்று அமைச்சர் மாணிக்கவேலர் ஒரு கேள்விக்குப் பதிலாகக் கூறியிருக்கிறார்.

புதிய சர்க்கரை ஆலைகள்

சென்னை மந்திரி சபை பரிசீலனை

புதிதாகச் சர்க்கரை ஆலைகள் நிறுவும் பிரச்சினையில் எந்தக் கொள்கையைக் கடைப்பிடிப்பது என்ற பிரச்சினை சென்னை மந்திரி சபையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, ஏற்கனவே இருப்பவை நீங்கலாக, அண்மையில் திருவண்ணாமலை, பேட்டைவாய்த் தலை, வடபாதி மங்கலம், சோழியனூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள புதிய ஆலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

வேலூரிலுள்ள கூட்டுறவுச் சங்கம் ஒன்று செய்துகொண்ட விண்ணப்பம், சர்க்காரின் பரிசீலனையிலிருந்து வருவதாகவும், தஞ்சாவூரிலிருந்தும் புதிய ஒரு ஆலைக்கு அனுமதி கோரி மனு ஒன்று வந்துள்ளதெனவும் தெரிகிறது.

இம்மாநில தற்போதைய சர்க்கரை பற்றாக்குறை 60,000 டன் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இந்த பற்றாக்குறையைத் தவிர்க்கக்கூடிய நிலை ஏற்படும் அளவிற்குப் புதிய சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி தரலாம் என்று அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டதாம்.

காங்கிரஸ் ஊழியர் குறைகள்

முறையிட தூதுக் குழு

சென்னை, ஏப். 6—

தமிழ் நாடு காங்கிரஸ் ஊழியர்கள் சார்பில், தங்கள் குறைகளை எடுத்துக்கூற ஒரு தூதுக் குழு, பிரதமர் நேரு, தலைவர் தேபர், இதர மத்திய மந்திரிகள் ஆகியோரைச் சந்திக்கும் எனக் கூறப்படுகிறது.

மதுவிலக்கை அமுல் செய்ய கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும், சென்னை நகரில் போக்குவரத்து வசதிகள் அதிகரிக்கப்படவில்லை என்றும், அந்தக் காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் பேசப்பட்டது.

துணிகரக் கொள்ளை!

நியூயார்க், எப். 7—

ஆறு மாத காலமாகத் திட்டமிட்டு, பகற்கொள்ளை நடத்தி 3½ லட்சம் டாலருடன் கள்வர்கள் மாயமாக மறைந்துவிட்ட நிகழ்ச்சி ஒன்று இங்குள்ள பெரிய ஒரு பாங்கியில் நடைபெற்றிருக்கிறது.

அந்தப் பாங்கியின் கணக்கர், தமது வீட்டிலிருந்து பாங்கிக்குச் செல்வதற்காகப் புறப்பட்டுத் தமது காரில் ஏறியபோது, 4 கொள்ளையர் அவரை அழுத்திப் பிடித்துக் கொண்டதும், ஒருவன் அந்தக் காரை நேரே பாங்கிக்கு ஓட்டியிருக்கிறான்; பாங்கியை வந்தடைந்ததும் அக்கள்வர்கள், கணக்கரின் முன் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி, வாய் திறவாமல்—சத்தமிடாமல் மானேஜரிடம் செல்லும்படி கட்டளை பிறப்பித்திருக்கின்றனர்; மானேஜர் மார்புக்கு நேராகவும் மற்றொருவன் துப்பாக்கியை நீட்டி அவரையும் அடக்கியாண்டிருக்கிறான்; இது போலவே அங்கிருந்த மற்றும் 9 சிப்பந்திகளும் துப்பாக்கிகளால் வளைக்கப்பட்டிருக்கின்றனர்.

பட்டுவாடா செய்யும் குமாஸ்தாக்களிடம் வினியோகிப்பதற்காக ஒரு தள்ளு வண்டியில் டாலர் நோட்டுகள் வந்தனவாம்; உடனே இரண்டு திருடர்கள் அவற்றை எடுத்துக் காரில் போட்டுக் கொண்டதும், மற்ற 6 கள்வர்களும் ஓடிப் போய்க் காரில் ஏறிக் கொண்டனராம்; உடனே கார் புறப்பட்டு அதிவேகமாகப் பறந்து சென்றுவிட்டதாம்.

அவர்கள் அந்தக் காரிலேயே முழுவதும் பிரயாணம் செய்யவில்லை என்றும், இடையில் அவர்கள் வேறு ஏதோ ஒரு காரில் சென்று மறைந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. இதுவரையிலும் இக்கொள்ளை நிகழ்ச்சியில் யாரும் கைது செய்யப்படவில்லையாம்.

பிரிட்டனின் புதிய அயல்நாட்டமைச்சர்

பிரிட்டன் மந்திரி சபையில் இதுகாறும் தற்காப்பு அமைச்சராக இருந்த 61 வயதுடைய ஹெரால்ட் மாக் மில்லன் என்பவர் இப்போது பிரிட்டனின் அயல்நாட்டமைச்சராக நியமனம் பெற்றுள்ளார்.

அண்மையில் சர். வின்ஸ்டன் சர்ச்சில் தமது பிரதமர் பதவியைத் துறந்ததும், அவரது இடத்திற்கு வந்த அயல்நாட்டமைச்சரான ஈடனின் பதவி காலியாக இருந்ததை யொட்டியே இப்போது ஹெரால்ட் நியமனம் பெற்றுள்ளார்.

புதிய தற்காப்பு அமைச்சராக செல்வின் சாயிட் என்பவரும், 'காமன்வெல்த்' உறவு அமைச்சராக ஹோம் பிரபுவும் நியமனம் பெற்றுள்ளனர்.

மூடத்தனத்திற்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லிங்கம் ஒன்றை ஒரு மாமரத்தடியில் பிரதிஷ்டை செய்து, அருகில் உள்ள மாமரத்திலிருந்து ஏழு மாங்கனிகள் பறித்து வைத்து. உயிரைத் தியாகம் செய்யக் கோரினாராம்; மேலும், அவள் தன் உயிரைக் கொடுத்ததும், லிங்கத்தின் அருகே உள்ள ஏழு மாங்கனிகளிலிருந்தும் ஏழு அருமருந்தன்ன குழந்தைகள் வெளித்தோன்றுவர் என்றும் 'பெருமான்' கூறினாராம்.

ஒரு சிவலிங்கத்தின் முன், ஒருவன் ஒரு கோடரி கொண்டு, குனிந்து நிற்கும் பெண் ஒருத்தியின் தலையைத் துண்டிப்பதுபோல் வரையப்பட்ட படம் ஒன்றும், அந்த 'புண்ணிய பாக்கியம்' என்ற புராணப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளதாம்.

தேவம்மாவின் கணவனை இன்னும் போலீசார் தேடிவருகின்றனர் எனத் தெரிகிறது.

விசாகை துறைமுகத்தில் வேலை நிறுத்தம்

ஆட்குறைப்புக்கு எதிர்ப்பு

தற்காலிகத் தொழிலாளர் நீக்கத் திட்டத்தின் கீழ், விசாகப்பட்டினம் துறைமுகத்தில், கப்பல்களில் சாமான்கள் ஏற்றி இறக்கும் தொழிலாளர்களில் மொத்தம் உள்ள 69 மேஸ்திரிகள், 1,055 தொழிலாளர்களில் 59 மேஸ்திரிகள், 885 தொழிலாளர் ஆகியோர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்.

இந்த ஆட்குறைப்பு நடவடிக்கையை ஆட்சேபிக்கும் வகையில், எல்லா தொழிலாளர்களும் கடந்த 4-ந் தேதி முதலாகவே வேலை நிறுத்தம் செய்து வருகின்றனராம்.

பத்தாயிரம் ரூபாய் பகற் கொள்ளை

நாகபுரி நகர கம்பெனி ஊழியர் ஒருவர், இங்குள்ள மகாராஷ்டிர பாங்கிக் கட்டிடத்தின் முன்னால் நின்று கொண்டிருக்கையில் ரூ. 10,000-த்தைப் பறிகொடுத்தார் என்ற தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

ரூ 10,000-த்திற்கான 'செக்'கை மாற்றி பணத்தை ஒரு பையில் போட்டு, அந்தப் பையை தாம் வைத்திருந்த சைக்கிள் வண்டியில் தொங்கவிட்டுக்கொண்டு நின்றிருந்ததாகவும், இதைக் கண்ட அடையாளம் தெரியாத ஒரு நபர், அதைப் பறித்துக்கொண்டு ஓடி மறைந்து விட்டதாகவும் அத்தகவல் கூறுகிறது.

சர்வதேச சீரமைப்பு-அபிவிருத்தி பாங்கியின் வாக்களிக்கப்பட்ட மூலதனத்தில் (902 8 கோடி டாலர்) இந்தியாவின் பங்கு 40 கோடி டாலர் ஆகும்.

வடநாட்டின் வஞ்சனையைக் கம்யூனிஸ்டுகள் மட்டும் ஏன் கண்டிக்கவில்லை?

கழகக் கூட்டங்கள்

முகவை (இராமநாதபுரம்)
அரண்மனைவாயில் முன்பு
9—4—55 மாலை **6** மணிக்கு
பேசுபவர்:
முகவை ஆர். எஸ். பாண்டியன்
(குறிப்பு: அன்று இரவு 10 மணி அளவில், கழகக் கட்டிடத்தில் நடைபெறும் பொது உறுப்பினர் கூட்டத்திலும் கலந்துகொள்வார்.)

★

ஆம்பூர்
நேரு திடலில்
10—4—55 மாலை **6** மணிக்கு
தலைவர்: ஏ.எல்.சி. கிருஷ்ணசாமி
பேசுவோர்:
என். வி. நடராசன்
சி. பி. சிற்றரசு
ப. உ. சண்முகம்
என். ஏ. ரசீத்
வி. ஏ. பசூல்
க. நெடுஞ்சோழன்

★

சோழத்திபுரம்
(புடையூர் குறுக்குச்சாலை)
10—4—55 மாலை **5** மணிக்கு
தலைவர்: டி. கே. சீனிவாசன்
பேசுவோர்:
சிற்றுளி சுப்பிரமணியம்
சு. இளநாகன்
எம். சாமிநாதன்

★

பெங்களூர் (அக்கிப்பேட்டை)
சிக்லால் பாக்கில்
10—4—55 மாலை **6** மணிக்கு
தலைவர்: சி. உலகநாதன்
பேசுவோர்:
கி. மனோகரன்
மு. கோ. வேந்தன்

அய்யம்பேட்டை தி.மு.கழக. உறுப்பினர்கட்கு

"11—4—55-ல், புதிய செயற்குழு அமைக்கப்பட்ட பின்னர், நடைபெறவிருக்கும் முதல்பொதுக் கூட்டம், தோழர் க. அன்பழகன் தலைமையில் நடைபெறும்" என்று மேற்படியூர் கழகத் துணைச் செயலாளர் அறிவிக்கிறார்.

வடசென்னை குறள் நெறிக் கழகம்

9—4—55 மாலை 6 மணிக்கு இராயபுரம், எண் 59, மன்னார் சாமி கோவில் தெரு, மேற்படி கழக அறையில், தோழர் மரியண்ணா தலைமையில், பல பொருள் குறித்து தோழர்கள் பலர் பேசுவர்.

10—4—55 காலை 10 மணிக்கு, தோழர் கி. தியாகராசனார் குறள் வகுப்பு நடத்துவார்.

இல்லாத ஒற்றுமையை எப்படி நாம் சீர்குலைக்க இயலும்?

சென்னை பொதுக் கூட்டத்தில் கேள்வி

"ஐந்தாண்டுத் திட்டம் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் ஓரவஞ்சனையை எடுத்துக் காட்டுகிறது; தென்னாட்டிற்கு கிடைக்க வேண்டிய நியாயமான பங்கு அதில் கிடைக்கவில்லை—தென்னாட்டு மக்களின் கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுகின்றன—என்று, இந்த நாட்டில் நாம் மட்டுமல்ல—தி. மு. கழகம் மட்டுமல்ல—காங்கிரஸ்காரர்கள் உட்பட பலர் எடுத்துக் கூறிவிட்டார்கள்; இடித்துரைத்துவிட்டார்கள்.

"ஆவடி மாநாட்டில் அம்புஜம்மாள் கூறினார்கள்; நிதிமந்திரி சுப்பிரமணியம் கோவையில் கூறினார்; சேலம் எஸ். வி. ராமசாமி டெல்லி மக்கள் சபையில் இடித்துரைத்திருக்கிறார்; திரு-கோச்சியைச் சேர்ந்த அன்னீ மாஸ்கரைன் பேசியிருக்கிறார்; குருபாதசாமி என்ற பி. சோ. கட்சி உறுப்பினர் கூறியிருக்கிறார்; ஆனால், இப்படி எல்லாக் கட்சியினரும் கண்டித்த ஒரு திட்டத்தை, கம்யூனிஸ்டுகள் மட்டும் கண்டிக்காமலிருப்பானேன்? எல்லோரின் கண்களையும் உறுத்தும் வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் ஓரவஞ்சனை கம்யூனிஸ்டுகளின் கண்களுக்கு மட்டும் தெரியாமலிருப்பானேன்? தெரியாமல் எப்படியிருக்க முடியும்? தெரிந்துகொண்டும், தங்கள் கண்டனக் குரலை அவர்கள் எழுப்பவில்லை என்றால், வடநாட்டு ஏகாதிபத்தியத்திடம் அவர்களுக்கு அவ்வளவு 'பக்தி' என்றுதானே பொருள்? 'ஏக இந்தியா' மோகம், கண்ணுக்குத் தெரியும் பேருண்மையைக்கூட வெளிக் கூற முடியாது செய்துவிடுகிறதா?"

—இவ்வாறு, 2—4—55 அன்று, சென்னை, ஆழ்வார்பேட்டையில், அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் என். வி. நடராசன் பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு தோழியர் ஆலமேலு அப்பாதுரை தலைமை தாங்கினார்.

தோழர்கள் என். வி. நடராசன், அகமழகன், ஏ. கே சாமி, டி. வி. நாராயணசாமி, முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசினர்.

தோழர் என். வி. நடராசன் அவர்கள், கழக இலட்சியம் குறித்தும், இன்ன பிற அரசியல் நிலைகள் குறித்தும், ஐந்தாண்டுத் திட்டங் குறித்தும் விரிவாகப் பேசினார்.

தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"'இந்தியாவில் உள்ள பல்வேறு சகோதர தேசீய இனங்களிடையே நிலவும் ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் சீர்குலைக்கிறார்கள்,' என்று, நம்மீது குற்றஞ்சுமத்துகிறார்கள்; 'ஏக இந்தியா' பேசுகிற எல்லாக் கட்சியினரும் இந்தியாவில் என்றுமே இதுவரை இல்லாத—இருக்காத—இருக்க முடியாத ஒற்றுமையை நாம் சீர்குலைப்பதாக ஒரு பெரும் பொய்யினைக் கூறுகிறார்கள்.

"பண்டித நேரு சில மாதங்களுக்கு முன்பு குறிப்பிட்டிருக்கிறார் — 'இந்திய மக்களிடையே, எல்லோரும் இந்தியர் என்றெண்ணுகிற உள்ள உணர்வுபூர்வமான ஒற்றுமை, ஐக்கியம் இல்லை: இருப்பதெல்லாம், அசைக்க முடியாத உறுதியான மத்திய அரசாங்கம்தான்; அதைக் கொண்டுதான், நாம், இந்தியாவில் அரசியல் ஒற்றுமையை நிலைநாட்டி வருகிறோம்'—என்று!

உண்மை அப்படியிருக்க, நாம் எப்படி, இல்லாத ஒற்றுமையைச் சீர்குலைப்பவர்களாக, சிதைப்பவர்களாக இருக்க முடியும்?

"இந்த நாட்டில், ஒரே தாய் வயிற்றில் பிறந்த இரு சகோதரர்கள்—இரத்தத் தொடர்பும், ஒட்டும் உறவும், பற்றும் பாசமும்கொண்டவர்கள்—ஒற்றுமையாகவாழவேண்டியவர்கள்—ஒன்றாக வாழ முடியாமல் போய்விடுகிற நிலை ஏற்படுகிறது.

"சமுதாயமும் சட்டமும், அந்தச் சகோதரர்கள் பிரிந்து தனித்தனியாக சம உரிமைகளுடன் வாழ வழி கோலுகின்றன.

"ஒரு சமுதாயத்தை உருவாக்கும் எண்ணற்ற குடும்பங்களில் ஒரு சிறு அங்கம், பல சந்தர்ப்பங்களில் ஒற்றுமையுடன் வாழ முடிவதில்லை—ஒரே தாய் வயிற்றில் பிறந்திருந்துங்கூட! அப்படியானால் தெளிவான வேற்றுமைகள் பல கொண்ட—இரு வேறு தாய்களைக் கொண்ட—இரு மாறுபட்ட இனங்கள் எப்படி ஒன்றாக வாழ முடியும்?

"இந்தோ-ஆரிய இனமக்களைக் கொண்டது வடநாடு; திராவிட இனமக்களைக் கொண்டது தென்னாடு—பண்டித நேருவின் சரித்திர ஆராய்ச்சிப்படி! இரு இனங்களும் எந்தவித ஒட்டும் உறவும் இல்லாதவை—நேற்று வரையில்! அப்படி வேறுபட்ட ஒட்டும் உறவும் பற்றும் பாசமும் இல்லாத—இருக்க முடியாத இருவேறு இனங்கள் ஒன்றாகத்தான் வாழவேண்டுமென்பது என்ன நியாயம்? அவசியமென்ன—ஒன்றாயிருக்க?

"இரத்தத் தொடர்புகொண்ட ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகளே ஒற்றுமையாக வாழமுடிவதில்லை என்றால், வேறு வேறு தாய் வயிற்றில் பிறந்த இரு வேறு மக்கள் மட்டும் ஏன் ஒன்றாக வாழ வேண்டும்? எப்படி முடியும் ஒன்றாக வாழ?"

★★

தலைமைக் கழகம்: அறிக்கை—8/55

தி. மு. கழக மாவட்டக் கிளைத் தேர்தல்

மாவட்டம்	தேர்தல் நாள்	நேரம்	இடம்	தேர்தல் ஆணையாளர்
செங்கற்பட்டு	10—4—55	மாலை 2½ மணி	'திராவிட நாடு' அலுவலகம், காஞ்சிபுரம்	அ. பொன்னம்பலனர்
வட ஆற்காடு	10—4—55	மாலை 2 மணி	தி. மு. கழக அலுவலகம், ஆம்பூர்	என். வி. நடராசன்
தஞ்சை	10—4—55	காலை 10 மணி	நாடார் சத்திரம் இரயிலடி, மாயவரம்	சத்தியவாணிமுத்து
மதுரை	10—4—55	மாலை 3 மணி	விக்டோரியா எட்வர்டு ஹால், மதுரை	இரா. நெடுஞ்செழியன்
இராமநாதபுரம்	10—4—55	மாலை 3 மணி	நாடார் பரிபாலன சங்கம், விருதுநகர்	தில்லை வில்லாளன்
நெல்லை	10—4—55	காலை 10 மணி	தி.மு. கழக அலுவலகம், கன்னம்மன் கோயில் தெரு, நெல்லைச் சந்திப்பு	ஏ. பி. தருமலிங்கம்

"அறிவகம்", சென்னை
4—4—'55

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.